**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.563/2024**
**Preliminary Register :**
**Police Station : Semmanchery PS**

**Deposition of witness for : LW5/PW3**
**:**
**Name : கணேஷ்**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026.**
(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை:</u>**

நான் ஆவடியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.3.2022 அன்று விடியற்காலை 3.45 மணி அளவில் எனக்கு செம்மஞ்சேரி காவல் நிலையத்திலிருந்து பெண் போலீசார் ஒருவர் போன் மூலம் எனது மகன் கமலேஷ் என்பவர் செம்மஞ்சேரி நான்கு முனை சாலை அருகே விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக கூறினார். நான் விடியற்காலை 04.30 மணி அளவில் சம்பவ இடத்திற்கு வந்து விட்டேன். அப்பொழுது வெள்ளை நிற மாருதி சுசுகி ஆந்திர மாநிலத்தை சேர்ந்த கார் ஒன்று இருந்தது. எனது மகன் எச்சில்

நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அவர் R15 கருப்பு நிற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து கொண்டிருந்த பொழுது மாருதி கார் யூட்டன் எடுப்பதற்காக திரும்பிய பொழுது இடித்ததாக கேள்விப்பட்டேன். எனது மகன் சம்பவ இடத்தில் தலையில் அடிபட்டு மற்றும் முதுகில் இடுப்பு பகுதியில் அடிபட்டு சம்பவ இடத்தில் இறந்து விட்டார். அவரை ஆம்புலன்ஸ் மூலம் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு உடல் கூராய்வுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>**

எனது மகனை மோதியதாக சொல்லப்படும் வாகனம் எந்த திசையில் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனது மகன் எவ்வளவு வேகத்தில் வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபரை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் அவராக தான் கீழே விழுந்து இறந்து விட்டார் என்றாலும் இழப்பீடு தொகைக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u> இல்லை**

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்**